# மட்டக்களப்பு பல்கலைமாணவர் 30 பேர் கைது; சக மாணவர் நேற்று வகுப்புகளை பகிஷ்கரிப்பு!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

மாலை 2 6-11-85 புதன்கிழமை (ஐப்பசி 21 வைபர் 22) முழக்கம் 272

## அம்பாறையில் வைத்து விசாரணை

மட்டக்களப்பு வந்தாறுமூலை பல்கலைக்கழக கல்லூரியைச் சேர்ந்த முப்பது மாணவர்கள் கமாண்டோ பொலிஸாரினல் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வந்தாறுமூலையில் இடம் பெற்ற குண்டுவீச்சுச் சம்பவம் சம்பந்தமாகவே இவர்கள் கைதானதாக பாதுகாப்புவட்டாரங்கள் அறிவித்துள்ளன. பல்கலைக்கழக வளவுக்குள் ஆயுதப்படையினர் புகுந்து அங்கு சாப்பிட்டுக்கொண்டும், குளித்துக்கொண்டும் இருந்தவர்களையே கைது செய்ததாக மாணவர் பிரதிநிதிகள் புகார் செய்துள்ளனர். சகமாணவர்களை ஆயுதப்படையினர் கைதுசெய்யப்பட்டதைக் கண்டிக்கும் முகமாக பல்கலைக்கல்லூரி மாணவ, மாணவிகள் நேற்று வகுப்புகளைப் பகிஷ்கரித்ததாகவும் தெரியவந்துள்ளது. கைதான முப்பது மாணவர்களும் தனியான விசாரணைக்காக அம்பாறைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

★ கடந்த 24ம் திகதி கோட்டைக்குள்ளிருந்து புறப்பட்ட

# குண்டு தாக்கிய கட்டடங்களை குழு நேரில் பார்வையிட்டது!

## பாதிப்புற்ற அரச அலுவலக அதிகாரிகள் குழுமுன் ஆஜராகி சம்பவங்களை விபரித்தனர்

கடந்த மாதம் 24ம் திகதி யாழ்ப்பாணம் கோட்டைக்குள்ளிருந்து மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சு, றெக்கட் லோஞ்சர் தாக்குதல்களால் சேதத்துக்குள்ளான யாழ். வீரசிங்கம் மண்டபம், தொலை தொடர்பு அலுவலகம் ஆகியவற்றை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்றுப் பிற்பகல் நேரில் சென்று பார்வையிட்டனர்.

கண்காணிப்புக் குழுவினர் முதலில் வீரசிங்கம் மண்டபத்துக்குச் சென்று தொழில் இலாகா, வருமானவரிஇலாகா கூட்டுறவுத் திணைக்களம், வட பிரதேச கூட்டுறவுச் சம்மேளனம் ஆகியவற்றின் கந்தோர்களுக்குச் சென்று தாக்குதலால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு இடங்களையும் பார்வையிட்டனர்.

அதன் பின்னர் பண்ணையிலுள்ள தொலை தொடர்பு கந்தோருக்குச் சென்று, குண்டு துளைத்த ஐந்து இடங்களையும் பார்வையிட்டனர். கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் எண்மருடன், குழுவின் செயலாளர் நாயகம் திரு. பீலிக்ஸ் டயஸ் அபேசிங்கா, யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர்களான திருவாளர்கள் த. குல

...6ம் பக்கம் பார்க்க

### ஹோட்டலுக்கு வரவில்லை

நேற்றுக் காலையும் கோட்டைக்குளிருந்து ராணுவத்தினர் வாகனங்களில் வெளியே

—6ஆம் பக்கம் பார்க்க

## முழங்காவில் படுகொலை பற்றி கண்காணிப்பு குழுவுக்கு புகார்

இம் மாதம் முதலாம் திகதி முழங்காவிலில்அப்பாவித்தமிழ் மக்களை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றதாக பூநகரி பிரஜைகள் குழு, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குப் புகார் செய்துள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் ஐந்து மணியளவில் ஹெலிகப்டரில் வந்திறங்கிய ராணுவத்தினர், பிள்ளையார் கோவில் வாசலில் இவர்கள் வரிசையில் நிறுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதாக பிரஜைகள்

—6ஆம் பக்கம் பார்க்க

### இரண்டு சம்பவங்கள்

திருகோணமலையில் இருந்து தம்பலகாமத்திற்குச் செல்லும் பிரதான நீர் விநியோகக் குழாய் குண்டுவைத்து தகர்க்

...6ம் பக்கம் பார்க்க

## கொழும்பு பஸ்பயணிகளிடம் வவுனியா நகரில் கொள்ளை

கடந்த புதன்கிழமை யாழ் தேவி மூலம் அனுராதபுரம் வந்து, அங்கிருந்து மினிபஸ்கள் மூலம் வவுனியா வந்த சில வடபகுதி பிரயாணிகளிடம் கொள்ளைகள் இடம்பெற்றதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

மினிபஸ்கள் வவுனியாவில் சிலரால் கடத்தப்படுவதால் தாம் வவுனியா பஸ்நிலையம் வரை அவற்றை செலுத்த முடியாது என ஏற்கனவே இப்பிரயாணிகளிடம் தெரிவிக்கப்பட்டதாம் இதனல் அப் பிரயாணிகள் வவுனியா டிப்போ அருகில் இறக்கிவிடப்பட்டனராம். எனவே அவர்கள் அங்கிருந்து நடந்து பஸ்நிலையம் வந்

—6ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பிரஜைகள் குழு, கண்காணிப்புக் குழுவிடம் வேண்டுகோள் :

## சன நெருக்கடி மிகுந்த இடங்களிலுள்ள ஆயுதப்படை முகாம்கள் மூடப்படவேண்டும்

வடக்குக கிழக்கு மாகாணங்களில் சனநெருக்கடி மிகுந்த இடங்களிலுள்ள சகல ஆயுதப்படை முகாம்களும் மூடப்படவேண்டும் எனவும், இது தொடர்பான ஆலோசனைகளை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நேற்றுக் காலை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னிலையில் ஆஜரான யாழ். பிரஜைகள் குழுப் பிரமுகர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

ராணுவ, விமானப் படை, கடற்படை முகாம்கள் தமிழ்ப் பகுதிகளில் சன அடர்த்தியான இடங்களில் அமைந்துள்ளதால் ஏற்பட்டுவரும் அசம்பாவிதங்களையும் பிரஜைகள் குழுவினர் எடுத்து விபரித்தனர்.

பிரஜைகள் குழுவினர் பொது மக்களின் கஷ்டங்களையும், பிரச்சினைகளையும் இன்று வேறு எவரும் இல்லாத நிலையில் கேட்டறிந்து அரசாங்க உயர் பீடங்களுக்குத் தெரிவிக்கும் ஒரு அமைப்

...6ம் பக்கம் பார்க்க

## 1986 பட்ஜட்

### பாதுகாப்புக்கு 584 கோடி ரூபா

1986 ம் ஆண்டுக்கான பட்ஜட் மதிப்பீட்டை நிதிஅமைச்சர் றௌனி டிமெல் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்

...6ஆம் பக்கம் பார்க்க

## இருபாலை மக்கள் மறியலால் போக்குவரத்து தடையானது

(இருபாலை)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்தியிலும், புனிதமரியாள் சேமக்காலை அருகிலும், இருபாலை கோண்டாவில் வீதியிலும் பொதுமக்கள் மேற்கொண்ட மறியல் காரணமாக இப்பாதையூடான போக்குவரத்துக்கள் நேற்றுக்காலை முதல் தடைப்பட்டன.

சகல வாகனங்களும் கோப்பாய்சந்தியுடன் திரும்பிஇராசபாதையூடாக பழம்சந்தியை அடைந்து ஆடியபாதம் வீதியூடாக கல்வியங்காடு வந்து யாழ். நகர் சென்றன.

கோப்பாய் புனித மரியாள் சேமக்காலையில் அத்துமீறிக்

—6ஆம் பக்கம் பார்க்க

### வல்வை, பருத்தித்துறை பிரஜைகள்

## வடமராட்சி சம்பவங்களை குழுமுன் இன்றுவிளக்குவர்

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பிரஜைகள் குழுக்கள் செய்த புகார்கள் பற்றி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு இன்று விசாரணைகளை மேற்கொள்ளும்.

யாழ்ப்பாணம் அசோக் ஹோட்டலில் இன்று காலை இவ்விசாரணை ஆரம்பமாகும். தொண்டமாறு, வல்வெட்டித்துறை முகாம்களிலுள்ள ஆயுதப் படையினருக்கு எதிராக ஆறு புகார்கள் குழுவிடம் செய்யப்பட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட ராணுவ அத்துமீறல்கள் பற்றி, சாட்சியங்களுடன் குழு முன்னல் இன்று ஆஜராகுமாறு இரு பிரஜைகள் குழுவினருக்கும் கண்காணிப்புக் குழுவின் செய

— 6-ம் பக்கம் பார்க்க

### ஆபாசப் பட உபகரணங்கள் பறிமுதல்

ஆபாசப் படம் காட்டியதால் யாழ். பெருமாள்கோவி

... 6-ம் பக்கம் பார்க்க

## டில்லி பேச்சுகளில் பங்குபற்ற கூட்டணி இன்று பயணமாகிறது

[சென்னை]

இலங்கை இனப்பிரச்சினை குறித்து வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரிக்கும் தமிழர் அமைப்புகளுக்கும் இடையிலான சந்திப்பு இவ் வாரக் கடைசியில் மீண்டும் நடைபெறும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் நேற்று சென்னையில் தகவல் வெளியிட்டன.

இப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள கூட்டணிச் செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம் தலைமையிலான கூட்டணிக் குழு இன்று புதுடில்லி புறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

'புளொட்' மற்றும் ஈழம் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்கள் சென்னையில் தற்போது இல்லாததால் அவர்கள் புதுடில்லி செல்வது தாமதமாகக்கூடும் என்றும் கூறப்பட்டது. கடந்த சனிக்கிழமை ராஜீவும் திரு. பண்டாரியும் இனப்பிரச்சினைபற்றி பேசினர்.

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு

**வரி விளம்பரம்**

### விற்பனைக்கு

எங்கள் தமிழ் மண்ணின் சொந்த உற்பத்திக்கு ஊக்கங் கொடுங்கள்! பனை ஓலையில் கண்ணைக் கவரும் தீபாவளி வாழ்த்துக்கள் விற்பனையாகின்றன!! இன்றே வாங்குங்கள்!!! கல்வி மூலவள நிலையம், புத்தூர்.

### காணவில்லை

28-9-85 தொடக்கம் இரண்டு பசு மாடுகள் காணவில்லை. வயது 7ம் 2ம். சிவப்பு நிறம் ஒன்று சினைப்பட்டது. தயவு செய்து இதைப் பற்றி அறிவிப்பவர்கட்கு நஷ்ட ஈடு கொடுத்து மாடுகள் எடுக்கலாம் S தாமோதிரம்பிள்ளை, 5/1, புறாடி ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம்.

### ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 22, கன்னாதிட்டி வீதி, சத்தியா அன்கோ அவர்களிடம் 31-5-1983 தொடக்கம் 25-10-1984 வரை வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 29-11-1985 வெள்ளிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அதே அடைவுகடையில் வைத்து என்னால் விற்கப்படும். வி. செ. குட்டிப்பிள்ளை, ஏல விற்பனையாளர், வண்ணார்பண்ணை.

## சட்ட விரோத மின்சாரப் பலி

(நெடுங்கேணி)

சட்ட விரோதமாக மின்சாரம் பெற முயன்ற நடராசா தங்கராசா (24) என்பவர் மின்சாரம்தாக்கியதால் மரணமான சம்பவம் நெடுங்கேணியில் இடம்பெற்றது.

# வெற்றி தோல்வி இயற்கை; தோல்வி வெற்றியின் அறிகுறி

(நீர்வேலி)

வெற்றி தோல்வி என்பது இயற்கையே, அதிலும் தோல்வியே வெற்றியின் அறிகுறி, கல்லூரி மாணவர்களிடையே இப்படியான போட்டிகள் நாடாத்தப் படுவதால் மாணவர்களின் கல்வித்தரம் அதிகரிப்பதுடன், உச்சரிப்பு, வாசிப்பு, உறுப்பாக எழுதும் திறன் போன்றன வலுப்பெறுகின்றன. இவை அனைத்தையும் புகட்டி எதிர் காலத்தில் ஒரு மாணவனை நற்பிரஜையாகத் திகழவைப்பது ஆசிரியர்கள் பணியே.

இவ்வாறு நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் இக்கல்லூரியில் இருந்து ஆங்கில தினப்போட்டியில் கலந்து பரிசு பெற்றுக் கொண்ட மாணவ, மாணவிகளுக்கும் இவர்களை ஊக்குவித்த கல்லூரி ஆசிரியர்களிற்கும் எடுக்கப்பட்ட பாராட்டு விழாவில் கல்லூரி அதிபர் திரு. கு சண்முகநாதன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவர்களையும் தமது பிள்ளைபோல் நினைத்து கல்வி கற்பிக்க வேண்டும். கல்வி கற்பிப்பதோடு பிள்ளைகளின் பழக்க வழக்கம், ஒழுங்கு போன்றவற்றையும் கவனிக்க வேண்டும். ''ஒழுக்கம் உயிரினும் மேல்'' என்பதனால் ஒழுக்கம் இருந்தால் கல்வி என்னும் பயிர் தானாக வளர முடியும். மாணவ சமுதாயம் மாபெரும் சமுதாயமாகப் போற்றப் படுவதுகூட இவ் ஒழுக்கம் என்ற சொல்லாலே. எமது கல்லூரியில் இருந்து கலந்து கொண்ட மாணவர்களில் பெரும் பாலானோர் வெற்றி பெற்றுள்ளனர். கலந்து கொண்ட மாணவர்களில் வெற்றி பெறாத மாணவர்களிற்கு இன்னொரு சந்தர்ப்பம் வெற்றி கிடைக்கும் சந்தர்ப்பமாக அமையும். போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கட்கும் ஊக்குவித்த ஆசிரியர்களுக்கும் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இவ்விழாவில் ஆசிரியர்கள் திரு பொ. மகாதேவா, செ. நவரத்தினம், திருமதி. பூபதி கந்தசாமி ஆகியோரும் உரையாற்றினார்கள். இறுதியாக கல்லூரி ஆசிரியை செல்வி. ந புஷ்பராணி நன்றி கூறினார்.

## இன்று கூட்டம்

யாழ். சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கத்தின் இருபத்தெட்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை காலை ஒன்பது மணிக்கு யாழ். ஸ்ரீதர் படமாளிகையில் நடைபெறும். விசேட அழைப்பின் பேரில் சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எம். கந்தையா, யாழ் மாவட்ட சுகாதார அத்தியட்சகர் டாக்டர் என். கனகசபை, யாழ். போதனா வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் சி. எஸ் நச்சினார்க்கினியன் ஆகியோர் சமூகமளிப்பார்கள்.

## பெருமாள் கோவிலில்....

சனீஸ்வரப் பெயர்ச்சியை முன்னிட்டு வண்ணை பெருமாள் ஆலயத்தில் நேற்று முன்தினம் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அரைகுறை உடையுடன் காணப்பட்ட இளைஞர் ஒருவர் கோவில் முகப்பிலுள்ள கிணற்றுள் பாய்ந்ததால் அங்கு பெரும் பதற்றமேற்பட்டது. இவர் ஒருவாறு வெளியே தூக்கி விடப்பட்டாராயினும், சில நிமிடத்தில் அவர் ஆலயத்துள் சென்று மூலஸ்தானத்திலுள்ள விக்கிரகத்தின் முடியைக் கழற்ற எத்தனித்தார். அங்கு கூடிய இளைஞர்கள் அவரைப் பிடித்து ஆலயத்துக்கு வெளியே கொண்டு சென்றனர்.

## சந்திரமண்டல பூசை நிறைவு

(சரசாலை)


சரசாலை இலந்தைத் திடல் வீரமாகாளியம்மன் ஆலயத்திலும் சரசாலை முத்துமாரியம்மன் ஆலயத்திலும் சரசாலை நுணுவில் சிதம்பரவிநாயகர் ஆலயத்திலும் சந்திரமண்டல பூசை மிகச் சிறப்பான முறையில் இடம்பெற்றது.

## இயக்குநர்களாக நியமனம்

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினர்களாக டாக்டர் பீ. கிருஷ்ணபிள்ளையும் உப-தபாலதிபர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளையும் யாழ். கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள் அறுவரும் தமது பதவிகளை இராஜினாமாச்செய்ததையடுத்துயாழ்.கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். தணிகாசலத்தை ஏற்கனவே இயக்குநர் சபைத் தலைவராக நியமித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.



❀ அரியாலை கனகரத்தினம் வீதியைச் சேர்ந்த வரதராஜன் ரஞ்சினிதேவி தம்பதியின் மகள் ரேணுகா இன்று தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்.

❀ வண்ணார்பண்ணை, சிவகுரு விக்னேஸ்வரி தம்பதியின் மகன் இளங்கோ இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ வில்வன்தெரு, கனகரத்தினம் சுலோசனாதேவி தம்பதியின் மகள் வாசுகி இன்று தனது ஆறுவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ கொக்குவில், செ. சண்முகலிங்கம் செல்வநாயகி தம்பதியின் புதல்வி ரேணுகா இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகி ர்.

❀ கைதடி நுணுவில், காத்தலிங்கம் சௌநதரம் தம்பதியின் மகன் ரதீஷன் இன்று தன் ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ கோப்பாய் கட்டப்பிராய், அமரசிங்கம் சாந்தம்மாதேவி தம்பதியின் மகள் கார்த்திகா இன்று தன் நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ யாழ். ஆஸ்பத்திரி வீதி, முருகானந்தம் ராகினிதேவி தம்பதியின் மகள் சிவப்பிரியா இன்று தன் ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ கல்வியங்காடு, முருகேசு ஜெயேந்திராணி தம்பதியின் மகன் டுக்ஷன் இன்று தன் எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ நல்லூர், வைரவர் கோவில் வீதி, சின்னத்தம்பி யோகபமா தபதியின் மகள் சந்திரா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## சிறுவரின் நடவடிக்கைகளை கண்காணித்தல் அவசியம்

(புலோலி)

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்து விட்டால் மட்டும் போதாது அவர்களின் சகல நடவடிக்கைகளையும் கண்காணித்துக் கொள்ள வேண்டியது மிக முக்கியமாகும், அப்போதுதான் பிள்ளைகள் கலவியை ஒழுங்காகப்பயின்று உயர்வடைய முடியும்.''

இவ்வாறு, பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய வித்தியாலய அதிபர் திரு. சே. ஏகாம்பரநாதன் குறிப்பிட்டார். வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அதிபர் குறிப்பிட்டதாவது.

ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் இணைந்து ஒருகுடும்பம் போலச் செயற்படும் போதுதான் பாடசாலைகள் அபிவிருத்தி அடைய முடிவதுடன் மாணவர்களின் கல்வித்தரமும்மேம்பாடடைய முடியும். இதனைக்கருத்திற் கொண்டு ஒவ்வொருவரும் செயற்பட வேண்டும்.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. சே. ஏகாம்பரநாதனும் (அதிபர்) ம் செயலாளராக சட்டத்தரணி ஆர். உருத்திராவும் பொருளாளராக வ. வே. நவரத்தினக் குருக்களும் செயற் குழு உறுப்பினர்களாக திரு. வே. கிருஷ்ணர், திரு. எஸ். பரமு திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம், திரு. என். சிவசுப்பிரமணியம், திருமதி எஸ். கணேசன், திருமதி தவமணி இராசதுரை ஆகியோரும் தெரிவாகினர். வித்தியாலயத்திற்கான விழிப்புக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## அறிவித்தல்

# கிளிநொச்சிச் சந்தை

கிளிநொச்சி பழைய சந்தையில் பாதிக்கப்பட்ட மாதாந்த வாடகைக் கடைக்காரர்கள் அனைவருக்கும் புதிய சந்தையில் இடம் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. சம்பந்தப்பட்ட அனைவரும் எதிர் வரும் 14-11-85ந் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி உப அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் சமூகமளித்து தத்தமது கோரிக்கைகளைச் சமர்ப்பித்து இடங்களைப் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ந. பாலசுப்பிரமணியம்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்
உள்ளூராட்சி நிர்வாக சேவை.

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை,
கிளிநொச்சி உப அலுவலகம்,
கிளிநொச்சி. 4-11 85

# TOEFL

*Test Of English As A Foreign Language.*

AMERICA, CANADA போன்ற நாடுகளின் COLLEGES AND UNIVERSITIESகளில் HIGHER STUDIESஐத் தொடரவிரும்புவோருக்கும் அந்நாடுகளில் EMPLOYMENT OPPORTUNITIESகளை எதிர் பார்ப்பவர்களுக்கும் இப்பரீட்சையிற் சித்தி அவசியம். 11-1 86ல் Colomboல் அடுத்த TOEFL Examination நடைபெறும்

Commencement Of Our Lectures
9-11.85

**WEEK ENDS ONLY**
**FULL COURSE FEE RS. 200**

Lectures:
பிரபல ஆங்கில விரிவுரையாளர்
**கந்தையா நவரேந்திரன்**

தொலைபேசி 24201
**கன்ரேபியா கல்வி நிலையம்**
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

## உரும்பராய் இந்துக் கல்லூரி
# பவளவிழா

மேற்படி விழா சம்பந்தமாக, நன்கொடை அளிக்க விரும்பும் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், தயவுசெய்து இவ் விழாவிற்காக அமைக்கப்பட்ட விளம்பரக் குழுவின் செயலாளர்: திரு, S. K: மனோகரபூபனை, உரும்பராய் சந்தியிலுள்ள அவரது ஸ்தாபனத்தில் தொடர்பு கொள்ளவும்.

உ. இ. கல்லூரி பவளவிழா
விளம்பரக்குழு.

# தொழிற் பயிற்சி

❀ **COMPUTER PROGRAMMING BASIC – COBOL**
பயிற்சியளிக்கப்படும்.

❀ ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங் சகல இன ரெலிவிசன் டெக் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.

❀ எலக்ரிக்கல் வயறிங்

❀ எலக்ரிக்கல் வெல்டிங்

❀ மோட்டார் றீவைண்டிங்

கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிககப்படும்.

ஆரம்பம்: **14.11.85**

**JAFFNA TECHNICAL INSTITUTE**
ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவையருகாமை)
யாழ்ப்பாணம்.

★ ஒரு கடிதம்

## நடமாடும் மினி இறைச்சிக் கடைகளால் எமக்கு நஷ்டம்

இன்று பரவலாக அதிகார மற்ற மினி ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி கடைகள் தோன்றியுள்ளன. இதைவிட வேறு நடமாடும் அங்காடி இறைச்சிக் கடைகளும் தோன்றியுள்ளன. மாநகரசபை எல்லைக்குள் மட்டுமின்றி மாவட்ட சபை எல்லைப் பரப்பினுள்ளும் பரவலாக இவை நடைபெறுகின்றன.

இந்நிலைமை குறித்து மாநகர சபையின் ஆணையாளருடனும், மாவட்டசபை செயலாளருடனும் தொடர்பு கொண்டுள்ளோம். எனினும் அவை தொடர்ந்து நடைபெறவே செய்கின்றது. 1984 ம் ஆண்டின் பின் இன்று வரையும் நாட்டில் அசம்பாவிதம் நடைபெற்ற நாட்களில் எமது கடைகள் திறந்து வியாபாரம் செய்ய முடியாத போதிலும், தொழிலாளிகள், ஆடு, மாடு, கொள்வனவு செய்யும் வியாபாரிகளை பாதிக்காத வண்ணம் அத்தனை குடும்பங்கட்கும் எம்மாலியன்ற சம்பளம் கொடுத்து காப்பாற்றினோம். இதனாலும் நாம் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளோம்.

''லைசென்ஸ்'' அதிகாரமுள்ள இறைச்சிக்கடை வியாபாரிகளாகிய நாம், எவ்வித நஷ்டமும் அடையாத, அதிகாரமற்ற சர்வாதிகாரப் போக்குடன் நடத்தப்படும்இத் தகைய மினி இறைச்சிக் கடைக்காரர்கள், நடமாடும் அங்காடி இறைச்சி வியாபாரிகளால் பாதிப்படைகின்றோம்.

இவற்றை கவனிப்பார் யாருமில்லையா? இவ்விற்பனைக்கு சுகாதாரப் பகுதி உணவுப் பரிசோதனைகள் கூட இல்லையா? இறைச்சிக்கடை விதிமுறைகளில் தொடர்புள்ள எந்த ஸ்தாபனமாவது இவற்றைக் கண்டிக்க முடியாதா? இப்புதிய செயற்பாடுகளால் நஷ்டத்திற்குள்ளாகி உள்ள எங்கள் நிலையை உணர்ந்து பொது மக்களாவது தீர்ப்பு வழங்குமாறு வேண்டுகின்றோம்.

★ யாழ். மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கம்.

### கண்காட்சி

சுன்னுகம் வாணி இன் ஸ்ரிரியூட் ஆதரவில் மாபெரும் கண்காட்சியும், மலிவு விற்பனையும் இம்மாதம் 23 ஆம், 24 ஆம், 25 ஆம் திகதிகளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பிரதம கல்வியதிகாரி கருத்து:

## தொழில் முன்னிலைக் கல்வி வாழ்வில் புகழ் ஈட்டவல்லது

(சாவகச்சேரி)

'' மனித வாழ்க்கையில் அழியாப் புகழை நிலை நிறுத்துவது கல்வி. அதிலும் தொழில் முன்னிலைக் கல்வி முக்கியமானது. ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'' எனவே போதனை முறைக் கல்வியோடு மட்டும் நின்று விடாது இன்று மாணவரின் இந்த ஓவிய, கைப்பணி கண்காட்சி,மாணவர்களின் சிந்தனை, செயல் திறமையை வெளிப்படுத்தியுள்ளன. இவை மாணவர்களின் சாதனைக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.''

இவ்வாறு சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் நடை பெற்ற ஓவிய, கைப் பணிக் கண்காட்சியை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்துப் பேசிய யாழ். கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு.வே.சபாநாயகம் குறிப்பிட்டார்.

மகளிர் மகாவித்தியாலய அதிபர் திருமதி. ஜீ. பரராஜசிங்கம் தலைமையில் இந்த கண்காட்சி ஆரம்பமானது. மகளிர் மகா வித்தியாலய மாணவியர்களும், அயற் பாடசாலை மாணவர்களும் பலவிதமான ஓவியங்களையும், கைப்பணிப் பொருட்களையும், தையற் பொருட்களையும் காட்சிக்கு வைத்திருந்தனர். ஓவிய ஆசிரியர் கோ. கைலாசநாதன் கைப்பணி ஆசிரியை திருமதி, இராஜநாயகம், திருமதி தியாகராஜா ஆசிரியை ஆகியோர் இக்கண்காட்சிக்காகப் பெரிதும் உழைத்து திறம்படச் செய்திருந்தனர். ஓவியக் கண்காட்சியில் ஆசிரியை திருமதி இராஜநாயகத்தின் கைவண்ணத்தால் உருவான 'சரஸ்வதி' 'நடனமாது' இரண்டும் ஓவியக் கலையின் மைல் கல்லாக விளங்கியது.

கலைத்துறை வட்டாரக்கல்வி அதிகாரி கலாகேசரி ஆ. தம்பித்துரை அயற்பாடசாலை அதிபர்கள் மங்கள விளக்கேற்றி வைக்க காட்சி ஆரம்பமானது. தொடர்ந்து நடைபெற்ற சொற்பொழிவில் திரு. சபாநாயகம் தொடர்ந்து கூறியதாவது:–

''அதிகாரிப்பதவியைவிட ஆசிரிய பதவியே மேலானது என்பது எனது கருத்து. ஆசிரிய சமுதாயத்தை மக்கள் சமுதாயம் பெரிதும் மதிக்கிறது. கல்வி முறையில் கண்ணுல் பார்த்து உணர்ந்துகொண்டு பயில்வது மேல். அதற்கு ஓவியம், கைப்பணி ஒரு முன்னேடியாக உள்ளது' என்ருர் அவர்.

சித்திர வட்டாரக் கல்வி அதிகாரி கலாகேசரி ஆ. தம்பித்துரை பேசுகையில்:– மாணவர் மத்தியில் தூய உள்ளம் வளர அழகியற்கல்வி அவசியம். அழகியற்கலை மிக மிக ஆழமானது. அடி மனதின் ஆழத்திலே புதைந்துள்ள தன்மைகளையும், அழியாத உண்மையின் தத்துவத்தையும், அழகியற்கலையையும் வெளிப்படுத்துவதே இது. இது ஆக்கப்படுவதன்று. இது ஒருவகைப் புனித ஆற்றல் என்ருர்.

சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தங்கராஜா பேசுகையில், கலையில், கலாச்சாரத்தில், நாகரிகத்தில் தலை சிறந்தோங்கிய தமிழ் சமுதாயத்தின் கலைப்பொக்கிஷங்கள் அழிந்து பட்டு விடாமல் இந்தவகையான அழகியற் கல்வி வழி காட்டுகிறது என்ருர். மட்டுவில் மகாவித்தியாலய அதிபர் திரு. ரீ. காசிநாதனும் உரை நிகழ்த்திஞர். ஓவியம், கைப்பணி ஆகியவற்றில்மிகச்சிறந்த மாணவ,மாணவியர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. பிரதம கல்வி அதிகாரி திரு. வே. சபாநாயகம், சித்திர வட்டாரக்கல்வி அதிகாரி கலாகேசரி ஆ. தம்பித்துரை ஆகிய இருவரும் பரிசில்களை வழங்கினர்:

### வயோதிபருக்கு சிற்றுண்டி

(நல்லூர்)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த இன்ரறக் கழக அங்கத்தவர்கள் அதன் தலைவியின் தலைமையில் கைதடி வயோதிபர் இல்லத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள வயோதிபர்களுக்கு சிற்றுண்டிகளை வழங்கிக் கௌரவித்தனர். தமக்கிருக்கும் குறைபாடுகளை இன்ரறக் கழக உறுப்பினர்களுக்கும். யாழ்ப்பாண ரேட்டரிக்கழகத்தலைவர் ரேட்டரியன் மகேந்திரன் ஆகியோருக்கும் தெரிவித்தனர்.

Lipton

எச்சரிக்கை!

லிப்டன் லாவோஜி

போலி லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாக எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க வர்த்தக அடையாள சட்டத்தின் பிரகாரம், பதிவு செய்யப்பட்ட லாவோஜி வர்த்தக அடையாளத்தை மீறும், தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் அல்லது பொருட்களை விற்பனை செய்வோர்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும். எனவே போலி லாவோஜிகளை தயாரிப்போர் அல்லது விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அசல் லாவோஜி தேயிலையை எமது கிளைகளில் அல்லது எமது மொத்த வியாபாரிகள் அல்லது சில்லறை விற்பனையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

லிப்டன் சிலோன் லிமிட்டெட்,
த. பெ. எண் 86,
கொழும்பு.




லிப்டன் லாவோஜி
அதி சிறந்த தேயிலைத் தூள்.

உதய சிந்தனை

தான் வாழும் ஊர்மக்களைப் பகைத்துக் கொள்பவரின் வம்சம் பூண்டோடு அழியும்.

--கொன்றை வேந்தன்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதயஒலி

6-11-85 புதன்கிழமை (குரோதன - ஐப்பசி 21)

# சந்தேக நபர்களே பாதுகாவலர்களா?

நேற்று முன்தினம் தனது முதலாவது யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொண்டிருந்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு, திட்டமிட்டபடி தனது விசாரணைகளை அன்றைய தினம் நடத்த முடியாது போனமை ஒரு வரலாற்றுச் சம்பவமாகும்.

ராணுவ அத்துமீறல்கள் தொடர்பாகப் பொதுமக்களின் புகார்களை நேரடியாக விசாரித்தறியவும், சம்பந்தப்பட்ட இடங்களைப் பார்வையிடவுமென விசேஷ ராணுவ விமானத்தில் இங்கு வந்த குழுவினர், ராணுவம் முகாமிட்டிருக்கும் கோட்டைக்குள்ளேயே முழுநாளும் தங்கியிருக்க நேர்ந்தமை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

யாருக்கு எதிராகப் பொது மக்கள் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருக்கிறார்களோ, அதே இராணுவத்தின் பாதுகாப்புடன் சில குழு உறுப்பினர்கள் விசாரணை நடைபெற்ற ஹோட்டலுக்குச் சென்றமை சரித்திரப் புத்தகங்களில் வைரக் கற்களால் பதிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சியாகும்.

இந்தக் கண்காணிப்புக் குழு எதற்காக, யாரால் நியமிக்கப்பட்டது?

இதன் செயற்பாடுகள்என்ன? இதற்குள்ள அதிகாரங்கள் என்ன?

இவற்றுக்கான பதில்களில், கருத்து வேறுபாடுகள் உண்டு.

குழு சுதந்திரமாகவும், சுயாதிக்கத்துடனும் இயங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதென இதன் முதற்கூட்டத்தில் அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுவில் ஒன்பது பேர் அரசாங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டவர்கள். மற்றைய இருவர் ஈழம் தேசிய விடுதலை முன்னணி சமர்ப்பித்த பட்டியலில் இடம்பெற்ற இருபது பேரிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள்.

கடந்த மூன்று வாரமாக இவர்கள் கொழும்பில் கூட்டங்களை நடத்தினர். பூஸாவிற்கும் திருமலைக்கும் விஜயம் செய்தனர்.

ஆனால், பொது மக்களிடமிருந்து கிடைத்த ராணுவத்துக்கு எதிரான புகார்களையிட்டு நேரடி விசாரணையை நடத்தவென இவர்கள் மேற்கொண்ட முதலாவது விஜயம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்ததுதான்.

இந்த நிலையில் பொதுமக்களும், பிரஜைகள் குழுக்களும் சில நிபந்தனைகளை விதிக்க நேர்ந்தது.

முறைப்பாட்டுக்காரர்கள், பிரஜைகள் குழுப்பிரமுகர்களின் சாட்சியங்கள் பதிவு செய்யப்படும் போது ஹோட்டலுக்கு ராணுவத்தினர் வரக்கூடாது என்பது இதில் முக்கியமானதாகும்.

அதேபோல, இராணுவத்தினரின் வாக்குமூலம் பதியப்படும்போது, மற்றைய பகுதியினர் சமுகம் கொடுக்க மாட்டார்கள் என இணக்கம் காணப்பட்டது.

இதனைப் பூரணமாக ஏற்றுக் கொண்ட பின்னரே கண்காணிப்புக் குழுவினர் இங்கு வருகை தந்தனராயினும், நடைமுறையில் எல்லாமே எதிர்மாறாக அமைந்துவிட்டது.

விசாரணைக்குழு ஹோட்டலுக்கு வருவதற்கு முன்னரே ஆயுதப்படையினர் ஹோட்டல் பகுதியை மட்டுமன்றி; யாழ். நகரையே சுற்றி ரோந்து மேற்கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

ஹோட்டலைக் காவல் புரிந்தனர். வீதிகளில் தாராளமாக நடமாடினர். அவர்கள் நின்ற இடங்களிலேயே குண்டுகள் வெடித்தன.

இதனால் முறைப்பாட்டுக்காரர்கள், சாட்சிகள், பிரஜைகள் குழுஉறுப்பினர்கள் ஹோட்டலுக்குச் செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டது. உயர் அரசாங்க அதிகாரிகள் சிலர் இவர்கள் நின்ற இடத்தைத்தேடிச் சென்று நிலைமையை விளக்கிப்பேச வேண்டிய நிலை உருவானது.

மூன்று பிரசைகள் குழுக்கள் உண்மை நிலையை குழுவின் செயலாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளனர்.

காலை ஒன்பதுமணிக்கு ஹோட்டலுக்கு வரவேண்டிய கண்காணிப்புக் குழுவினர் ஆறரைமணிநேர தாமதத்தின் பின் இரண்டாகப் பிரிந்து வந்தனர்.

ராணுவப்பாதுகாப்பு வேண்டாமென்ற ஐவர் முதலில் வந்து சேர்ந்தனர்.

மிகுதி நால்வரும் கவச வண்டிகள் முன்னும் பின்னும் வர, மிடுக்கான ராணுவப் பாதுகாப்புடன் நான்கு மணியளவில் ஹோட்டலுக்கு வந்துவிட்டு உடனேயே திரும்பிக் கோட்டைக்குள் செல்ல நேர்ந்தது.

இவ்வாறான நிலையில் கண்காணிப்புக்குழு எவ்வாறு சுதந்திரமாக இயங்கப்போகிறது என்ற கேள்வி அப்பாவிப் பொது மக்களிடம் எழுவது தவிர்க்க முடியாது!

குழுவினரே பாதுகாப்புக் கேட்கிறார்கள் என்றால், பொது மக்கள் நிலை ......?

டெய்லி நியூஸ் பத்திரிகையில்

வெளியான கட்டுரையின் தமிழாக்கம்

# பாரம்பரிய தாயகங்கள்

# உண்மையும் கற்பனைகளும்

ஜெகன் பெரேரா

பாரம்பரியத் தாயகங்கள், தொடர்பான தமிழர்களின் கோரிக்கையானது ஒரு வரலாற்று அடிப்படையிலான உரிமை எனும் வகையில் முன்வைக்கப்பெற்றுள்ளது. சிங்களவருடைய கோரிக்கைகளோடு இது விசித்திரமான ஓர் உறவு பூண்டுள்ளது. உதரணமா இது ஒரு 'சிங்களத் துவீபம்' என்கின்றனர் சிங்களவர்கள். எனவே, இக்கோரிக்கைகள் இரண்டும், மெய்ம்மையும்புனைகதையும் கலந்த ஒரு அடித்தளத்தின் மீது அமைந்தனவாகும்.

வரலாற்றை வைத்துக் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட விதமாகத் தர்க்கிக்கலாம் அல்லது அர்த்தங் கொள்ளலாம் என்பதனை நினைவில் இருத்திக் கொள்ளுதல் வேண்டும். எடுத்துக் காட்டாக, இலங்கைத் தீவில் பிரித்தானிய ஆட்சி நிலவிய காலத்தில் ஒன்றுசேர்த்துத் தொகுக்கப்பெற்ற தரவுகளை பேராசியர் ஜெறிபீறிஸ் எடுத்துக் கையாள்வதைப் பார்ப்போம். பொதுப்படக் கூறுவதாயின் கிழக்கு மாகணத்தின் ஓரளவு ஒடுங்கிய கடலோர நிலப் பரப்பின்மீது மாத்திரமே தமிழர்கள் குடியமர்ந்திருந்தனர் எனக் காட்டியுள்ளார் இப்பேராசிரியர்.

நாட்டின் உட்புறப் பிராந்தியமானது, ஏறத்தாழ முழுமையும் காடுகளாகவே இருந்தது.பேராசிரியர் ஸ்ரான்லிதம்பையா இதனைஎவருக்குமில்லா நிலம்' ('நோ மான்ஸ் லன்ட்') என வருணித்துள்ளார். ஆகவே, கண்டிப்பாகக் கூறின், பாரம்பரிய தாயகங்களானவை இக்கடலோர ஒடுக்க நிலங்களுடன் மட்டுப்படுத்தப்பட வேண்டியன ஆகும். பிரிட்டிஷாரின் வரைகோட்டுத் தேசப் படங்கள் கேள்விக்கு இடமானவை. இத் தேசப் படங்களை மட்டும் காரணமாக வைத்துக் கொண்டு, கிழக்கு மாகாணத்தில் எஞ்சிய பாங்களாக அமையும் உள்நாட்டுப் பிராந்தியங்களையும் இத்தாயகங்களுள்உட்படுத்துதற்கு,வலுவுள்ள ஏதுக்கள் இருக்க முடியாது.

ஆனால், தமிழருடைய உரிமைக் கோரிக்கைகளைத் தோல்வியுறச் செய்வதற்கு அல்லது நிராகரித்தற்கு சிங்கள மக்கள் இந்தத் தர்க்கத்தினைப் பிரயோகிக்கலாமானால், அதே சிங்களவருக்கு எதிராகவும் இத்தருக்கத்தைப் பிரயோகிக்க முடியும். இத்தீவின் மத்திய மலைப்பிரதேசமானது 'பாரம்பரியக் கண்டியக் காணிகள்' என்பது சிங்கள மக்களின் வாதம் ஆனால், அங்கு இருத்தற்குப் பெருந்தோட்டத் தமிழர்களுக்கு உரிமையில்லை எனவும் சிங்களவர் மேலும் கோரிநிற்கின்றனர்.

இதன் அடிப்படையிலேயே 1949ஆம் ஆண்டு இத் தமிழ் மக்கள் இலங்கைப் பிரஜாவுரிமையற்றவர்களாக்கப்பட்டனர். இதற்கு எதிராகப் பின்வருமாறு வாதிடலாம்:

"தேயிலைத் தோட்டச் செய்கைக்கென பிரிட்டிஷார் மலையக நிலங்களைச் சுவீகரித்தனர். முதலில் இங்கு வசித்தோர் சனத்தொகை மிகக் குறைவாக இருந்தது. இல்லையேல், அங்கு சனங்கள் முதலில் வாழ்ந்ததே கிடையாது. விசேடமாக உயர் மலைப் பிராந்தியங்களின் சனத்தொகை நிலைமை இப்படியாகத்தான் இருந்தது. ஆகவே, ஏற்கெனவே சிங்களக் குடியமர்வுகள் இல்லாதிருந்த மலையகப் பிராந்தியங்கள் அவர்களுடைய பாரம்பரிய வாழிடங்களாகக் கொள்ளப்பெற முடியாதவை" ஆகும்.

ஆகையால், 'இந்நிலங்கள் மீது முதன் முதலில் குடியமர்ந்தவர் யாவர்?' எனும் வினா விடைகளானவை, தமிழர்-சிங்களவர் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவமாட்டா. இவ்வகையாக 'பாரம்பரிய தாயகங்கள்' வாதம் என்பதைப் பகுப்பாய்வு செய்வதால் (அது இரு சாராரில் எவரினதாக இருந்தாலும் சரி), பிரச்சினை தீர வழி பிறக்கப் போவதில்லை என்பது தெளிவு. இத்தகைய பகுப்பு ஆராய்ச்சியானது, வரலாற்றுக்குப் பாரபட்சமான பொருள்கோடலுக்கு மாத்திரமே இட்டுச்செல்லும். தவிரவும், இக்காலத் தேவைக்கு இந்த அணுகுமுறை உசிதமானதல்ல. ஏனெனில், இன்றைய தேவை, வரலாற்றில் மயக்கம் விளைவிக்கும், தெளிவற்ற, விடயங்களையிட்டுத் தெளிவு பிறக்க வழிகோலி, இருபத்தொராம் நூற்றாண்டிற்கு இலங்கையர்களை ஏற்றவர்களாக்குதல் ஆகும்.

கிழக்கு மாகாணம் பாரம்பரியமாகத் தமக்கு உரியதே எனச் சிங்களவரும் கோருகின்றனர். தமிழரும் கோரிநிற்கின்றனர் இருதரப்பினரும் வரலாற்றையே தமக்கு ஆதாரமாக எடுத்தாளுகின்றனர் ஆனால், உண்மையில், இரு பேருடைய கோரிக்கைகளுமே அடிப்படையில் அரசியல் ரீதியானவை. அரசியல் ஒழுங்கமைப்பின் மூலாதார தன்மையுடன் இக்கோரிக்கைகள் தொடர்பு உடையன. பாதுகாப்பு, மனித இனத் தனித்துவம் என்பவற்றை இவை மையமாகக் கொண்டவை.

இங்ஙனமாக, தமிழருடைய கண்களுக்கு, கீழ் மாகாணம் ஒரு 'தாயகம்' எனும் வகையில் முன்னரிலும் பார்க்க அதிக வலுவுடையதாகத் தோன்றுகிறது.அண்மைக் காலச் சம்பவங்களும் இதற்கு ஓரளவு காரணமாகும். சிங்களவர் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் பிரதேசங்களில், தமிழர்கள் தீங்கிற்கு உட்படும் சாத்தியக்கூறுகள் அநேகம். இது தமிழ் மக்களுக்கு அண்மைக் காலச் சம்பவங்கள் வாயிலாக உணர்த்தப்பட்டுள்ளது. எனவே, அவர்கள் 'தாயகங்களை' நிலை நாட்டத் தற்பாதுகாப்பு தேட முனைவது இயல்பான ஒரு விளைவாகும்.

இவையெல்லாம் அரசியற் கட்டாயங்கள். இருந்தாலும், இக்கட்டாயங்கள் நிறைவேறும் பொருட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமிழ் மக்களுக்கென 'ஏலவே ஒதுக்கீடு' ('றிசேர்வ்') செய்வது சற்றேனும் நடைமுறைச் சாத்தியமானதல்ல. ஏனெனில், ஏற்றுக் கொள்ளப்பட்ட சில கருத்தேற்புகளுக்கு அது முரணானது. தேசிய ஐக்கியமும் பொருளார திறமைச் செயற்பாடுமே இக்கருத்தேற்புகள் ஆகும்.

'மார்கா' நிறுவனம் மேற்கொண்ட ஒரு கணிப்பாய்வும், அதன் விளைவான முடிபுகளும் இக்கருத்தேற்புகளுக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டப்படுகின்றன. பொருளாதாரத்தில், 'ஒப்ரிமம் லெவெல்' என்றுஒன்று உண்டு. ஏதாவதொரு விடயம்தொடர்பில் ஆகக் குறைவாகவோ மிக அதிகமாகவோ இராது 'சிறந்த அளவு' என்பதையே அப்பதம் குறித்து நிற்கும் எதிர்காலக் காணிக் குடியமர்வுகள் தமிழர்க்கென ஒதுக்கீடு செய்யப்படும் பட்சத்தில், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கடும் ஆளணி வலுக்குறைபாடு நேரும்படியாகும். ஏனெனில், பொருளாதாரவகையில் 'சிறந்த எண்ணிக்கையினர்' எனப்படக்கூடிய போதியோரானதமிழர்கள் அங்கு கிடைக்க மாட்டார்கள். அவர்கள் அங்கு அப்படிக் கிடைப்பார்களாயின், பிற இடங்களில் தமிழர்களின் ஆள்வலு ஏற்ற இறக்கங்களினூற் சீர்குலைவுகள் நேரும்படியாகும்.

எவ்வாறாயினும், இனப் பிணக்குகள், மோதல்கள், என்பவற்றில், உணர்ச்சிகள் முந்திக் கொள்கின்றன. அவற்றின் முன்னிலையில் காரண காரிய வாரியான சிந்தனை தடுமாறுகின்றமையை அவதானிக்கலாம் எந்தவொரு சர்ச்சைக்கும் தீர்வுகாண்பது இலகுவல்ல. உணர்ச்சிததும்பும் சர்ச்சையெனில் தீர்வுகாணுவது மேலும் சிக்கலானது. காரணம்? தர்க்க ரீதியான தரவுகளினின்றும்விவாதம் தொடங்கி, பின்னர் படிப்படியாக ஒரு முடிபு எய்தப்படுவதுதான் தகுந்த நடைமுறை. அந்நடைமுறை இங்கு பின்பற்றப்படுவதைக் காண்பது அரிது.

'வண்டி முன்னும் குதிரை பின்னும்' என்ற வாக்கில் இங்கு கருமங்கள் நடக்கக் காணலாம், அதாவது முடிவானது முதலிலேயே மங்கலாக உருப்பெற்றுவிடுகிறது. பின்னர்தான் அம்முடிவுக்கு இட்டுச் சென்ற காரணங்கள் கண்டுபிடிக்கப்படும். ஒவ்வொரு தரப்பினருடைய சிந்தனையோட்டமும் இப்படியாகவே இருக்கும். ஒவ்வொரு தரப்பினரினதும் முடிவு, நம்பிக்கைகள்முன்கூட்டியே உருப்பெற்றுவிடுகின்றன.அவை எவ்வளவோ ஆதாரமற்றவையாக, நியாயமில்லாதனவாகக் கூட இருக்கலாம் பின்னர் நிகழப் போகும் சம்பவங்கள் தமது இந்நம்பிக்கைகளை ஊர்ஜிதப் படுத்தும் என்றும் இவ்விரு

—5ஆம் பக்கம் பார்க்க

★ அமெரிக்க ராஜாங்க மந்திரி சூல்ட்ஸ்

# ஜெனீவா உச்சிமாநாடு முன்னேற்பாடு பற்றி

## ஆராய ரஷ்யாவுக்கு விஜயம்!

(மாஸ்கோ)

இம்மாதம் அணுவாயுத உற்பத்திக் குறைப்பு தொடர்பாக ஜெனீவாவில் சோவியத் யூனியன் தலைவர் திரு, கொர்பசெவ்வுக்கும், அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனல்ட் றீகனுக்கும் இடையே நடைபெறவுள்ள உச்சி மாநாடு தொடர்பான முன்னேடி ஏற்பாடுகளின் பொருட்டு அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. சூல்ட்ஸ் தற்போது மாஸ்கோ வந்துள்ளார்.

திரு. சூல்ட்ஸ் சோவியத் வெளிநாட்டமைச்சருடன் இந்த உச்சிமாநாடு தொடர்பாக முதலில் விரிவான விவாதம் நடத்தினர்.

அப்போது இருதரப்பு உறவுகள் மற்றும் சர்வதேச விவகாரங்கள் பற்றியும் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது.

அணுவாயுதக் குறைப்பு விடயத்தில் இருசாராரும் கைக்கொள்ளவேண்டிய நிலைப்பாடு குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

திரு. சூல்ட்ஸ் திரு. கொர்பசெவ்வைச் சந்திக்கையில் ஜனாதிபதி திரு. றீகன் கொடுத்தனுப்பிய கடிதம் ஒன்றையும் அவரிடம் கையளிக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி உச்சி மாநாடு ஆக்கபூர்வமான பயனை அளிக்கும் என திரு. றீகன் நம்பிக்கை வெளியிட்டுள்ளதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

### தங்கத்தேர்

[கும்பகோணம்]

கும்பகோணம் உப்பிலியப்பன்கோவிலில்தங்கத்தேர் உருவாக்க தமிழகத் தகவல்துறை ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார்.

இருபத்து ஐந்து இலட்சம் ரூபா செலவில் இத்தேர் உருவாகவுள்ளது.

## கர்மவீரர் காமராஜருக்கு தமிழர் செய்யவேண்டிய கைம்மாறு

### காஞ்சிபுரத்தில் மூப்பனர் விளக்கம்

(காஞ்சிபுரம்)

"கர்மவீரர் காமராஜருக்கு நாம் செய்யக்கூடியகைம்மாறு தமிழகத்தின் வளர்ச்சிக்கு அவர் காட்டிய வழியில் செயற்படுவதே" என்று இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஜி. கருப்பையா மூப்பனர் காஞ்சிபுரத்தில் காமராஜரின் ஏழேகால் அடி உயரமுள்ள வெண்கலச் சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

இவ்வைபவத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேஷன் எம். பி. திண்டிவனம் ராமமூர்த்தி உட்பட மற்றும் பலரும் பேசினர்.

திருமதி மரகதம் சந்திரசேகர், விடுதலை வீரர் ஐம்பது பேருக்கான விருதுகளை வழங்கினர்.

### சட்டவிரோத ஊடுருவல்

(புதுடில்லி)

நாட்டின் மேற்குப் பகுதிக்கூடாகப் பயங்கரவாதிகள் பிரவேசித்துள்ளதற்தாக சான்றுகள் உள்ளன என்று மத்திய இணையமைச்சர் திரு. அருண் நேரு கூறியுள்ளார்.

இவ்விதம் நுழைந்த பயங்கரவாதிகள் பலர் சிறைபிடிக்கப்பட்டும் உள்ளனர் என்றும் சொன்னர் அவர்.

## அரபு உச்சி மாநாடு ஏற்பாடு: அரபாத் எகிப்துக்கு விஜயம்

(கெய்ரோ)

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தலைவர் யாஸிர் அரபாத் தற்போது எகிப்து விஜயம் மேற்கொண்டுள்ளார். அவர் எகிப்திய ஜனதிபதி முபாரக்குடன் மேற்காசிய நிலைகுறித்து விரிவாக விவாதிப்பார் என்று கெய்ரோ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அரபு உச்சிமாநாடு ஒன்று நடத்தப்ப வேண்டும் என்ற அரபாத்தின் முயற்சிகளில் இப்பயணமும் ஒன்றே என்று தெரிவிக்கபபடுகிறது.

இது இவ்வாறு இருக்க, பாகிஸ்தான் ஜனதிபதி ஜெனரல் ஷியாவுல்-ஹக்கும் சமீபத்தில் எகிப்திய விஜயம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இருபது வருடங்களின்பின் பாகிஸ்தான் ஜனதிபதி ஒருவர் எகிப்து விஜயம் மேற்கொண்டது இதுவே முதல் தடவையாகும்.

### தென்னபிரிக்க அரசின்

## இனவெறிக் கொள்கையை ஸிம்பாப்வே பிரதமர் சாடல்

(லண்டன்)

தென்னபிரிக்க இன ஒதுக்கல் கொள்கையை அணிசேரா நாடுகளின் புதிய தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ள ஸிம்பாப்வேயின் பிரதம மந்திரி திரு. றெபேட் முகாபே வெகுவாகச் சாடியுள்ளார்.

அமெரிக்க சஞ்சிகையான 'நியூஸ் வீக்'குக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியில் இந்த எதிர்ப்புக் காட்டப்படவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

### இறக்குமதி பாதிப்பு

(நாகபட்டினம்)

நாகபட்டினத்திலும் அதன் சுற்றுடலிலும் சமீப நாட்களாகப் பெரும் மழை பொழிந்து வருவதாகவும் இதனல் இரு கப்பல்கள் இறக்குமதியை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### சென்னைத் தகவல் கூறுகிறது

## சனிக்கிழமை கிழக்கில் 200 தமிழர் ராணுவத்தால் கைது

(சென்னை)

மட்டக்களப்புப் பல்கலைக்கழக மாணவர்கள் முப்பது பேரை பொலிஸார் பிடித்துச் சென்றுள்ளதாக நேற்றுக்காலை சென்னையிலிருந்து வெளியான தகவல் ஒன்று தெரிவித்தது.

இதே வேளை கடந்த சனிக்கிழமை இருநூறு தமிழர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புப் படையின் போர் நிறுத்த மீறல்கள் தொடர்வதாகவும் மதுரையில் உள்ள தமிழர் தகவல் நிலயம் அறிவித்துள்ளதாகவும் இச்செய்தி மேலும் தெரிவித்தது.

## லெபனனில் பயங்கர கார்க்குண்டு வெடிப்பு பலர் பலி, சோதனைச் சாவடி மீது மோதியது

(பெய்றூட்)


இஸ்ரேலின் எல்லைப் பகுதியில் தென்லெபனனில் நிகழ்ந்த பெரும் கார்க்குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் பதினைந்து பேர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

நூற்றைம்பதுகிலோ கிராம் எடையுள்ளதாக இக்குண்டு இருந்ததாகக் கூறப்படுகிறது.

மேற்படி கார் சோதனைச் சாவடி ஒன்றின் மீது மோதியதும் உள்ளிருந்த குண்டு வெடித்து இவ்விபரீதத்தை விளைவித்ததாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சில வரர இடைவெளிக்குப் பின் இக்கார்க் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### திருமண நன்றி நவிலல்



19-10-1985 சனிக்கிழமை அன்று கரவெட்டி "பூம்புகார்" இல்லத்தில் நடைபெற்ற திருமண வைபவத்திற்கு நேரில் சமூகமளித்தும், அன்பளிப்புகள் வழங்கியும், வாழ்த்துத் தந்திகள் அனுப்பியும் ஆசிகள் வழங்கிச் சிறப்பித்த நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் மணமக்கள் தமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்கள்.

'மணமக்கள்'
"பூம்புகார் இல்லம்'
கரவெட்டி

### பாரதத்திற்கு

## அமெ. கடற்படைத் தளபதி உத்தியோகபூர்வ விஜயம்

(புதுடில்லி)

அமெரிக்கக் கடற்படைத் தளபதி அட்மிரல் வோட்கின் தற்போது உத்தியோக பூர்வ பாரத விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அவர் இங்கு தங்கியிருக்கையில் கடற்படை முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து உரையாடுவார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

## தமிழகத்திற்கு மத்திய அரசு ரூ. 2 1/2 கோடி அளிப்பு

(சென்னை)

தமிழக குடும்பநலத் திட்டடத்தைச் சிறப்பாகச் செயற்படுத்தியதற்காக மத்திய அரசு இரண்டரைக் கோடி ரூபா ரொக்கம் வழங்கியுள்ளது.

இத்தகவலைச் சென்னையில் வெளியிட்ட சுகாதார மந்திரி டாக்டர் ஹண்டே இப்பணம் இத்திட்டத்தின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தப்படும் என்று சொன்னர்.

### அன்பளிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் அமோக நெல் விளைச்சல் ஏற்பட்டுள்ளதால் இந்தோனேஷிய விவசாயிகள் அறுபத்து ஐந்து தொன் அரிசியைப் பட்டினியால் வாடும்நாடுகளுக்கு அன்பளிப்பாக ஏற்றுமதி செய்யவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### ஆட்சேபம்

(சென்னை)

சென்னை மெரீன கடற்கரைப் பகுதியில் ஏராளமான கட்டு மரங்களும் படகுகளும் அரசினல் திடீரென அகற்றப்பட்டுள்ளதுகுறித்துஇந்திராகாங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திரு. வேணுகோபால் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இதனல் பல மீனவர்கள் பாதிப்படைந்துள்ளனர் என்று அவர் கூறியுள்ளார்.

### பாரம் பரிய....

—4ம் பக்கத் தொடர்

தரப்பினரும் திடமாக நம்பியிருப்பர்.

ஆனல், இப்படியான எண்ணப் போக்கு, மனப்பான்மை அடியோடு ஆக்கபூர்வமற்றது. எல்லாவற்றையும்விட இரு கட்சியினரும் பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு கொண்டிருப்பது அவசியமாகும். தீர்வு ஏற்படும் பட்சத்தில், அது ஒரு பக்கத்தவர்க்கு அநீதி விளைப்பதாக அமையுமானல், பாதிக்கப்பட்ட அப்பக்கத்தவர் ஆத்திரம் அடைந்து, தீர்வு அப்பேர்ப்பட்ட வடிவம்பெறுதிருக்க இடைஞ்சல்களை விளைவித்துக் கொண்டிருப்பார்.

முதலாவது உலகப் போர் முடிவில் ஜேர்மனியை, பிரிட்டன் பிரான்ஸ், அமெரிக்கா ஆகியவற்றின் கூட்டாகிய நேச நாடுகள் (அலைஸ்) தோற்கடித்தன; ஜேர்மனியைக் கடுரமாகவும் அதன்பின் அவை நடத்தின. அதன் பின்விளைவு? ஹிட்லரும் இரண்டாவது உலக மகா யுத்தமும் உருவாயின. பூரண முக்கியத்துவமான ஒரு விடயம் இது. சிங்களவர் இதனை எந்த அளவு நன்கு உணருகின்றனரோ, அந்த அளவுக்கு தமிழரும் உணர்வது இன்றியமையாதது.

(தொடரும்)

6 . 11 . 85 புதன்கிழமை

# ஈழமுரசு

## மரண எதிரொலி; சட்டவிரோத மின்கம்பி இளைஞரால் துண்டிப்பு

சட்டவிரோத மின் பாவனை கம்பியில் சிக்கி சண்டிலிப்பாயைச் சேர்ந்த எஸ். கந்தசாமி (50) என்பவர் மரணமானார். மரணமானவர் வீதியால் சென்றுகொண்டிருந்தபோது அப்பகுதியிலுள்ள வீடொன்றுக்கு சட்ட விரோதமான முறையில் இணைக்கப்பட்ட மின்கம்பி அறுந்து வீழ்ந்ததால் இப் பரிதாப சம்பவம் இடம்பெற்றது. இதனைத்தொடர்ந்து சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களின் மின் இணைப்புகளை சில இளைஞர்கள் துண்டித்ததுடன் எச்சரிக்கையும் செய்தனர்.

பல குடும்பத்தினர் வீடுகளை விட்டு வெளியேறினர்

# ஒட்டுசுட்டான் ராணுவ முகாம் எல்லை விஸ்தரிப்பு

# குடிமனைக் காணி சுவீகரிப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் இராணுவ முகாமிற்கு சமீபமாகவுள்ள நீர்ப்பாசன இலாகாவிற்குச் சொந்தமான மூன்று குடிமனைகளையும் சேர்த்து பாதுகாப்புப் படையினர் தமது பாதுகாப்பிற்கென முட்கம்பி வேலி அடைத்துள்ளனர்.

இதனால் அக் குடிமனைகளிலிருந்த நீர்ப்பாசன இலாகா ஊழியர்களின் ஒரு குடும்பத்தினரைத் தவிர ஏனைய குடும்பத்தினர் குடிமனைகளைவிட்டு வெளியேறியுள்ளார்கள். ஊழியர்கள் மட்டும் தனிமையாக ஒதுக்குப் புறமாகவுள்ள கட்டடங்களில் இருக்கின்றார்கள்.

இதே வேளையில், நீர்ப்பாசன இலாகா கந்தோருக்கு முன்பாகவுள்ள பிரதான வாயிலும் வாகனங்கள் உட்செல்ல முடியாதபடி மூடப்பட்டுள்ளது. அங்கு கடமையாற்றும் ஊழியர்களைத்தவிர வெளியார் எவரும் கந்தோருக்குச் செல்வதற்கு அடையாள அட்டை காண்பித்து, வந்து செல்லும் நேரங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். இதனால் வெளியார் எவரும் அச்சம் காரணமாக நீர்ப்பாசன இலாகாவிற்கு செல்வதைத் தவிர்த்து வருகின்றார்கள்.

இராணுவத்தினர் தமக்குத் தேவையான தண்ணீரையும் நீர்ப்பாசன இலாகாவிலிருக்கும் கிணற்றிலிருந்தே எடுக்கின்றார்கள். இதற்காக வாகனம் வருவதற்கு அரை மணித்தியாலம் முன்பாகவே இராணுவத்தினர் கிணற்றைச் சுற்றி வருவதால் பொதுமக்கள் நடமாட அஞ்சுகின்றார்கள்.

## கமாண்டோ பொலிஸ் சுட்டு பொதுமக்களில் இருவர்பலி

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் கமாண்டோ பொலிசார் சென்றவாகனங்கள்மீது தீவிரவாதிகள் குண்டுகள் வீசி தாக்கியதால், பொலிசாரும் திருப்பிச்சுட்டதினால் பொதுமக்களில் இருவர் பலியானதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இப்பகுதியில் தேடுதல் நடாத்திய ஆயுதப்படையினர் சிலரைக் கைது செய்து கொண்டு சென்ற சமயம் இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்தினால் பொதுமக்களில் இருவர் காயமடைந்துள்ளதுடன் இரு பொலிசாரும் காயமடைந்தனர். இப்பகுதியில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது.

## அடை மழையால் மக்கள் அவஸ்தை

(கொடிகாமம்)

கடந்த சில நாட்களாக பெய்துவரும் அடை மழையினால் கொடிகாமம், மிருசுவில் பகுதிகளிலுள்ள தாழ் பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. தொடர்ந்தும் இவ்வாறு மழை பெய்யுமாயின் இப்பகுதியிலுள்ள தாழ் பகுதிகளில் வசிப்போர் குடியெழும்ப வேண்டிய நிலை ஏற்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை மிருசுவில், உசன் வயல் வெளிகளில் அதிகளவு மழைநீர் தேங்கி நிற்பதால் இவ்வயல் வெளிகளில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் பாதிப்புறும் நிலையிலுள்ளன.

## ஆபாசப் பட ...

ஆனைக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையேயுள்ள 'மினி சினிமா' ஒன்றிலிருந்து வீடியோ டெக்கும், கசெட்டும் இளைஞர்களால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

## வடமராட்சி...

லாளர் நாயகம் திரு. பீலிக்ஸ் டயஸ் அபேசிங்கா, யாழ். அரசாங்க அதிபருக்கு ஊடாகக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இன்று பிற்பகல் குழுவினர் வடமராட்சியில் சம்பவம் நடைபெற்ற இடங்களுக்கு விஜயம் செய்யக்கூடும்.

## குருநகரில் கொள்ளை

(குருநகர்)

குருநகர், வேளாங்கண்ணி மாதா கோவிலடியில் நேற்று முன்தினம் இரவு கடை முன் பக்கக் கதவு உடைக்கப்பட்டு ரொக்கப் பணம், கைக்கடிகாரம், உணவுப் பொருடகள் முதலியன கொள்ளையடிக்கப் பட்டுள்ளன. நேற்று முன்தினமிரவு மழை பெய்துகொண்டிருப்பதைப் பயன்படுத்திக் கொள்ளையர் கைவரிசையைக் காட்டியதற்குத் தடயங்களாக குப்பி விளக்கொன்றும், எஞ்சின் இயக்கப் பாவிக்கப்படும் வளைவு இரும்பொன்றும் கண்டெடுககப்பட்டுள்ளன.

## 1986 பட்ஜட்...

—1-ஆம் பக்கத் தொடர்

தார். அதன் முக்கிய விபரத்தை ஒரே பார்வையில் தருகிறோம்.

செலவு - 6700 கோடி ரூபா; வரவு - 3600 கோடி ரூபா; துண்டு விழும் தொகை – 3100 கோடி ரூபா; ஆகக்கூடுதலான செலவாக 584 கோடி ரூபா பாதுகாப்புக்கு; இரண்டாவதாக 411 கோடி ரூபா கல்விக்கு; மூன்றாவதாக மகாவலி அபிவிருத்திக்கு 307 கோடி ரூபா; அடுத்து சுகாதாரத்துக்கு 217 கோடி ரூபா.

## தமிழீழ அதிரடிப்படை எச்சரிக்கை

தமது இயக்கத்தின் பெயரைப் பாவித்துச் சிலர் தனிநபர் வாகனக் கடத்தல், கொள்ளையடித்தல் போன்றவைகளில் ஈடுபடுவதாகவும், இவ்வாறு நடைபெற்ற செயல்கள்பற்றி தற்போது விசாரணை நடைபெற்று வருவதாகவும், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தமிழீழ அதிரடிப்படை இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## ஹோட்டலுக்கு....

வந்தனராயினும் அசோக் ஹோட்டல் பக்கம் வராது பொது நூலகம், முனீஸ்வரன் கோவில் சந்திகளில் நின்று கொண்டனர்.

## குண்டு ....

—1-ஆம் பக்கத் தொடர்

சேகரம் எஸ். பாலசிங்கம் ஆகியோரும் சென்றிருந்தனர்.

நேற்றுக் காலை கண்காணிப்புக் குழு அசோக் ஹோட்டலில் விசாரணைகளை நடத்திய போது, தொழிற் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. இராசநாயகம், வருமானவரித் திணைக்கள மேலதிக கமிஷனர் திரு கதிர்காமர், கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. வேலாயுதபிள்ளை, கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர் திரு. சிவமகராஜா, தொலை தொடர்பு திணைக்கள சிரேஷ்ட அதிகாரி திரு. ராஜ்குமார் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இச் சம்பவங்கள் தொடர்பாக தாம் அறிந்த விபரங்களை எடுத்துக் கூறினர்.

## இரண்டு...

— 1-ஆம் பக்கத் தொடர்

கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு இறைவரித் திணைக்கள அலுவலகத்திலும் எண்பதினாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப் பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

மங்கையரே!

தீபாவளிப் பண்டிகைக்கான ஆடைகளை விரைவாகவும் அழகாகவும் தைத்துப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்—

**Ramany Ladies Tailoring**

615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

(காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முன்பாக)

## கீரிமலை இல்லத்திலிருந்து

## அமரர் சுந்தரரின் நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன

அமரர் சுந்தரலிங்கத்தின் கீரிமலை இல்லத்திலிருந்த நூல்கள் அனைத்தும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

கலிபோனியாவிலுள்ள அமரரின் சிரேஷ்ட புத்திரன் பேராசிரியர் ஞானலிங்கத்துடன் சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் தொடர்பு கொண்டதன் பயனாகவே இந் நூல்கள் சங்கத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந்நூல்களுடன் முதிரையால் செய்யப்பட்ட நான்கு புத்தக அலுமாரிகளும், அமரருக்குச் சொந்தமான சட்ட நூல்களும், பாராளுமன்ற விவாதக் கோவைகளும், பொது நூல்களும், பேராசிரியர் ஞானலிங்கத்திற்குச் சொந்தமான விஞ்ஞான றேடியோ எஞ்சினியரிங் நூல்களுமாக சுமார் ஐநூறு நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இவற்றின் மொத்தப் பெறுமதி சுமார் ஐம்பது ஆயிரம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனின் தகவற்பகுதியினரும் சங்கத்திற்கு நாற்பத்தேழு நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

## மின்கம்பத்தில் கட்டப்பட்டார்

சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டமைக்காக இளைஞர் ஒருவர் உரும்பராய்ச் சந்தியில் நேற்று கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டார்.

## சன நெருக்கடி....

—1-ஆம பக்கத் தொடர்

பாகவே இயங்கி வருவதாகவும், கோட்டைத் தாக்குதல் சம்பவத்தையும் அவ்வாறே கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவித்ததாகவும் பிரஜைகள் குழுவினர் இங்கு எடுத்துக் கூறினர்.

எனவே, தாக்குதலால் பாதிக்கப்பட்ட இடங்களை குழு சென்று பார்வையிட வேண்டுமெனவும், சாட்சியமளிக்க விரும்புபவர்கள் ஹோட்டலுக்கு வர முடியாவிடின் அவர்களை நேரில் சென்று குழு சந்திக்க வேண்டுமெனவும் பிரஜைகள் குழுவினர் வலியுறுத்தினர்.

சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், வண. மைக்கல்சாமி, டாக்டர் ஜெகாபசுபதி, பேராசிரியர் கருணாநாதன், திருவாளர்கள் ஆர். இராஜலிங்கம், எஸ். அரவிந்தன், எஸ். கந்தசாமி, கே. விசுவலிங்கம் ஆகியோர் பிரஜைகள் குழு சார்பில் சென்றிருந்தனர்,

## முழங்காவில் ...

—1-ஆம் பக்கத் தொடர்

குழுத் தலைவர் திரு.பொ தங்கராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சம்பவம் பற்றி விசாரணை நடத்துமாறும், மரணமானவர்களின் ஏழைக் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறும் மேலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு...

—1-ஆம் பக்கத் தொடர்

துகொண்டிருந்தபோது இக் கொள்ளைகள் நடைபெற்றன.

மதுபோதையில் வந்த சிலர் கத்தியைக் காட்டி இப்பிரயாணிகள் சிலரிடம கைக்கடிகாரம், பணம் என்பவற்றை எடுத்துள்ளனர்.

இச்சம்பவத்தில் தென்பகுதியைச் சேர்ந்த பெண்மணி ஒருவரும் தமது பணத்தை இழந்தது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியின் பேச்சு

உலக சுகாதார ஸ்தாபனம் உயிர்களை பாதுகாக்கும் அதே வேளையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தீவிரவாதிகள் மனித உயிர்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள் என்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா நேற்றுகொழும்பில் நடைபெற்ற தெற்காசிய சுகாதார அமைச்சர்கள் மாநாட்டில் பேசும்போது தெரிவித்தார்.

## நீரில் மூழ்கி மரணம்

[நீர்வேலி]

நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் கோயில் கேணியில் நீந்திய இருபது வயது இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமான சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

## இருபாலை....

—1ஆம் பக்கத் தொடர்

குடியேறியவர்களால் கத்தோலிக்கர் ஒருவரின் சடலம் கூட அடக்கம் செய்யமுடியாமலிருப்பதால் அவர்களை வெளியேற்றி தமக்கு உரிமையான இச் சேமக்காலையை மீட்டுத் தரும்படி கோரியே இவ்வீதி மறியல் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக்காலை ஆறுமணிக்கு ஆரம்பமான இம்மறியற் போராட்டத்தில் ஐநூறுக்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் ஆலய பரிபாலன சபையினரும் கலந்துகொண்டனர்.

நண்பகல் 12.00 மணியளவில் இவ்விடயத்தில் தலையிட்ட இளைஞர்கள் இருபகுதியினரிடையேயும் சமாதானத்தை ஏற்படுத்தும் முகமாக முதலில் வழிமறிப்புத்தடையை நீக்கினார்கள். இதன்பின்னர் போக்குவரத்துக்கள் வழமைக்குத் திரும்பின.

இதுசம்பந்தமாக ஆலய பரிபாலன சபையினர் துண்டுப் பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 06-11-1985 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336